1975 அக்டோபர் 30]

[15-ம் பக்கத்தில் வெள்ளிக்குறியிட்ட வினு 136-க்கான விடையைக் காண்க.]

(a) Yes.

(b) The Tamil Nadu Electricity Board has taken the following steps to reduce the line losses :—

(1) Schemes for changing the size of the conductors to higher sizes and enhancing the distribution transformers capacities where-ever they are overloaded are being implemented.

(2) A Master plan has been evolved for erecting new grid lines and new 230 K.V., 110 K.V., 66 K.V. and 33 K.V. sub-stations with a view to reduce the transmission line losses.

(3) The line loss which is partly due to low power factor loads of the agricultural pumpsets is being improved upon by the installation of L.T. shunt capacitors at the motor terminals.

(4) A number of H. T. shunt capacitors are being installed at sub-stations to reduce the line current wherever the power factor is low.

(5) Synchronous condensers are also being installed in grid sub-station to improve the overall voltage condition of the grid and to reduce the line current.

(6) Surprise inspection squads have been formed at all operating systems to carry out surprise raids for checking the services in the area for defective metering, unmetered services, thefts, pilferages, etc. Prosecution has been launched in cases of pilferage where proper evidence is available.

(அ) ஆம்.

(இ) மின்சாரம் கம்பிகளில் அனுப்பப்படும்போது ஏற்படும் இழப்பைக் குறைப்பதற்காகத் தமிழ்நாடு மின்சார வாரியம் கீழ்க்காணும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது :—

(1) பங்கீட்டு மின் மாற்றிகளின் திறன் அளவு கடந்த சுமையைத் தாங்க வேண்டியுள்ள இடங்களிலெல்லாம், மின் கடத்திகளின் அளவைப் பெரிதாக்கவும், பங்கீட்டு மின் மாற்றி களின் திறனை உயர்த்தவும், பல்வேறு சீரமைப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

[1975 அக்டோபர் 30

(2) மின்சாரம் எடுத்துச் செல்லும்போது மின் கடத்தியில் ஏற்படும் இழப்பைக் குறைக்கும் நோக்கோடு, புதிய மின் இணைப்புகளை (New Girds) நிறுவுவதற்கும், 230 K.V., 110 K.V. 66 K.V., 33 K.V. கொண்ட துணை மின் நிலையங்களைப் புதிதாக ஏற்படுத்துவதற்குமான பெருந்திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது.

(3) மின்சாரம் கம்பிகளில் அனுப்பப்படுகையில் மின் இழப்பு ஏற்படுவதற்கு வேளாண்மை விசையேற்றங்களுக்கு வழங்கப்படும் மின்சாரத்தின் குறைந்த மின் சுமையும் ஓரளவுக்குக் காரணமாகிறது. இந்த மின்சார இழப்பு, விசையேற்றங்கள் உள்ள இடங்களில் குறைவழுத்த உற்றுழி மின் தேக்க அமைப்பை நிறுவுவதன் மூலம் சீராக்கப்படுகிறது.

(4) செலவாகும் மின்சாரம் குறைவாக இருக்குமிடங்களிலெல்லாம் கம்பிகளில் ஏற்படும் மின் இழப்பைக் குறைப்பதற்காக, துணை மின் நிலையங்களில் பல உயர் அழுத்த உற்றுழி மின் தேக்க அமைப்புகள் நிறுவப்பட்டு வருகின்றன.

(5) மின் இணைப்பின் மொத்த வோல்டேஜ் நிலைமையைச் சீரமைத்து கம்பியில் செல்லும் மின்சாரத்தைக் குறைக்கவும் மின் அமைப்புத் துணை நிலையத்தில் ஒரே கதியில் இயங்கும் மின்னாற்றல் சுருக்கிகளும் (Condensers) அமைக்கப்பட்டு வருகின்றன.

(6) குறைபாடுள்ள மீட்டர்கள், மீட்டர் இல்லாமலே மின்சாரத்தைப் பயன்படுத்துதல், திருட்டுகள், சிறு திருட்டுகள் முதலியவற்றைக் கண்டு பிடிக்க திடீர்ச் சோதனைகளை நடத்துவதற்காக இயங்கும் மின் ஏற்பாடுகள் அனைத்திலும், திடீர்ச் சோதனைப் படைகள் அமைக்கப்பட்டுள்ளன. சிறு திருட்டு நடைபெற்ற வழக்குகளில் மின்சாரம் திருடப்படும் நேர்வுகளில் தகுந்த சாட்சியம் கிடைத்ததால் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.